**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**அசல் வழக்கு எண் - 9/2021**

**பிரதிவாதி தரப்பு சாட்சி-1 சதீஷ்குமார் - திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க்** அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 23.07.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>வாதி தரப்பில் குறுக்குவிசாரணை:</u>**

1) நான் ஆசிரியர் பயிற்சி படித்துள்ளேன். இவ்வழக்கின் விபரம் எனக்கு தெரியும். எனது பாட்டா பெயர் பிச்சைபண்டாரம். எனது பாட்டனாருக்கு அமிர்தம், பொன்னம்மாள், செல்லம்மாள், பாக்கியம் என 4 பெண் வாரிசுகள் என்றால் சரிதான். சிவகுரு, தங்கராசு என்ற 2 ஆண்மக்கள் என்றால் சரிதான். எனது பாட்டனார் எப்போது இறந்தார் என்றால் நான் பிறப்பதற்கு முன்பே இறந்துவிட்டார். சுமார் 50 வருடங்கள் இருக்கும். தாவா இரண்டு அயிட்ட சொத்துக்கள் கொண்டது என்றால் சரிதான். தாவா ஏ அயிட்ட சொத்து சர்வே எண் தெரியுமா என்றால் 962/21 ஆகும். மேற்படி சர்வே எண் மொத்த விஸ்தீரணம் தெரியுமா என்றால் 6 ¼ செண்ட். தாவா ஏ அயிட்ட சொத்துக்கு சிவகுரு பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். வாதி செல்வராஜ், ரவிச்சந்திரன், பாலு ஆகியோர் சிவகுருவின் மகன்கள் என்றால் சரிதான். தாவா ஏ அயிட்ட சொத்துக்கு வடபுறம் முனையம்பட்டி செல்லும் ரோடு உள்ளதா என்றால், வடபுறம், மேற்குபுறம் இரண்டு பக்கங்களிலும் உள்ளது.

2) தாவா சொத்திற்கு வடபுறம் மேற்படி ரோடானது வளைவாக சென்று திரும்புகிறது என்றால் சரிதான். தாவா ஏ அயிட்ட சொத்தில் வீடு உள்ளதா என்றால் இல்லை, காலியாக உள்ளது. சிவகுருவுக்கு பட்டா வழங்கிய இடத்தில் யாரும் குடியில்லையா என்றால் இல்லை. தாவா ஏ அயிட்ட சொத்திற்கு தென்புறம் யாருடைய இடம் உள்ளது என்றால் அழகுவேல் இடம் உள்ளது. அழகுவேல் இடத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. தாவா ஏ அயிட்ட சொத்திற்கு கிழபுறம் யாருடைய இடம் என்றால் தங்கராசு இடம் உள்ளது. தங்கராசு என்பவர் எனது தகப்பனார் என்றால் சரிதான். எனது தகப்பனாரின் தகப்பனார் நிலத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் 962/23 ஆகும். என் தகப்பனாருக்கு எவ்வளவு இடத்திற்கு பட்டா கொடுத்துள்ளார்கள் என்றால் 1¾ செண்ட் ஆகும். இவ்வழக்கில் வாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் விபரம் தெரியுமா என்றால் தெரியும்.

3) தாவா ஏ அயிட்ட சொத்திற்கு மேல்புறம் ரோடு உள்ளது. தாவா ஏ அயிட்ட சொத்திற்கு வடமேற்கில் தாவா பி அயிட்ட சொத்து உள்ளது என்றால் சரிதான். தாவா பி அயிட்ட சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் ¾ செண்ட் ஆகும். தாவா ஏ அயிட்டம் மற்றும் பி அயிட்ட சொத்துக்களில் ஒரு வீடும் மற்றும் கடையும் உள்ளதா என்றால் சரியல்ல, பி அயிட்ட சொத்தில் மட்டும் ஆஸ்பெட்டாஸ் சீட் உள்ளது. பி அயிட்ட சொத்தில் கடைகள் எதுவும் இல்லையா என்றால் இல்லை. தாவா பி அயிட்ட சொத்தில் வாதி ஒரு சிறிய பெட்டிக்கடை வைத்து நடத்தி வருகிறார் என்றால் சரியல்ல. தாவா பி அயிட்ட சொத்தில் வாதி பெட்டிக்கடை வைத்துள்ளார் என்றும், அதற்கு பஞ்சாயத்தார் வாதியிடம் வரி வசூல் செய்து வருகின்றனர் என்றால் சரியல்ல. தாவா ஏ மற்றும் பி அயிட்ட சொத்துக்களில் வீடு மற்றும் கடை உள்ளது என்பதை நிரூபிக்க நீதிமன்ற ஆணையரை நியமித்து பார்வையிட்டால் தெரிந்துவிடும் என்றால் சரிதான்.

(வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி

**Principal District Munsif,**

**Kulithalai.**